பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/89 5/78

மலர் 21 மாசி 10 ரபி-அவ் 24 இதழ் 11
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22-2-79

இந்திமொழி எதிர்ப்புப் பற்றி

## எம். ஜி. ஆர். கலைஞரை சந்தித்துப் பேசினர்

(சென்னை)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு.மு.கருணாநிதியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

ஒரு காலத்தில் உடன்பிறப்புக்கள்போல் விளங்கி பின்னர் அரசியல் துறையில் பரம எதிரிகளாக மாறிவிட்ட இவ்விரு தலைவர்களும் பலவருடங்களுக்குப் பின்னர் இது முதல்தடவையாக நேற்று சந்தித்து அரை மணிநேரம் ஆலோசனை நடத்தினர்கள்.

[5-ம் பக்கம் பார்க்க]

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1979 -2- 21 PERIODICAL DIVISION LIBRARY

# சோவியத் போர்க் கப்பல்கள்

# சீனக்கடல் நோக்கி விரைவு

## வியட்நாம் எதிர்தாக்குதல் ஒன்றை முடுக்கியுள்ளது

பாங்கொக், பெப். 21

சீனமீது வியட்னாம் எதிர்த்தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக அறிவித்துள்ளது. சீன - வியட்நாம் எல்லையில் கடும்போர் தொடர்ந்து நடைபெறுகின்றது.

இதேசமயம் ஜப்பானிய கடல்வழியாக சோவியத் யுத்தக்கப்பல்களும், கண்ணிவெடி நாசகாரிகளும் சீனக்கடல் பகுதியைநோக்கி விரைந்துகொண்டிருப்பதாக டோக்கியோ செய்திகள் கூறுகின்றன.

வியட்நாமுக்குள் நுழைந்துள்ள தனதுபடைகளை சீன இன்னமும் திருப்பியழைக்கவில்லை. சீனப் படைகளின் லட்சியம் முடிந்ததும் திருப்பியழைக்கப்படும் என்று சீன உயர் அதிகாரி ஒருவர் நேற்று மீண்டும் வலியுறுத்தினர்.

எல்லைப் பகுதியை நோக்கி வியட்நாம் படைகள் பெரும் எடுப்பில் விரைந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. வடகிழக்கு எல்லையில் சீனமீது எதிர்தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருப்பதாக வியட்நாம் அறிவித்தது. இதே சமயம் வடமேற்கு எல்லையில் வியட்நாமுக்குள் புகுந்த சீனப் படைகள் முக்கிய நகரம் ஒன்றைத் தம்வசப்படுத்திக் கொண்டுள்ளனர். விட்நாம் சார்பில் சோவியத் யூனியன் தலையிட்டாலும் அதனைச் சமாளிக்கும் நிலையில் சீனர்கள் தயாராய் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

9 சோவியத் யுத்தக் கப்பல்களும் கண்ணிவெடி நாசகாரிகளும் சீனக்கடல் பகுதியை நோக்கி விரைவதாக ஜப்பானிய அவதானிகள் அறிவித்துள்ளனர். சோவியத் வேவு விமானங்களும் ஜப்பானுக்கு மேலாக பறந்து சென்றதாக அவர்கள் கூறினர்கள்.

இந்தப் போரில் இதுவரை 7 ஆயிரம் சீனப்படையினர் கொல்லப்பட்டு அல்லது காயப்படுத்தப் பட்டிருப்பதாக ஹனோய் கூறுகிறது

இப்போதைய போரில் வியட்நாமுக்கு பாடம் ஒன்று படிப்பிக்கப் போவதாக சீன கூறிய போதிலும் இன்னும் அது தன்லட்சியத்தை அடையவில்லையென்றும் கம்பூச்சியாவிலிருக்கும் வியட்னாம் படைகளை போர்முனைக்குத் திருப்பச் செய்வதே சீனர்களின் நோக்கமாக இருக்கவேண்டும் என்றும் யுத்த அவதானிகள் கருதுகிருர்கள்.

இப்போதைய நிலைமையில் யுத்தம் மேலும் பலநாட்களுக்கு நீடிக்கக் கூடும் என்று தெரிகின்றது.

இந்தப் போரில் அமெரிக்கா ராணுவ மட்டத்தில் தலையிடப் போவதில்லை யென்று அதிபர் கார்ட்டர் கூறியிருக்கிருர்.

## அரசமைப்புத் திருத்தம்: கூட்டணி எதிர்க்கும்

(கொழும்பு)

அரசமைப்புச் சட்டத்துக்கான 2-வது திருத்தத்தை எதிர்ப்பதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழு முடிவு செய்துள்ளது.

கட்சிமாறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபை தீர்மானிக்கும் பட்சத்தில் தொடர்ந்து அங்கத்தவராக இருக்க வகை செய்வதாக புதிய அரசமைப்புத் திருத்தம் அமைகிறது. இதனை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்பது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்தியக்குழு நேற்று மாலை கொழும்பில் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் ஆராய்ந்தது. இறுதியில் திருத்தத்தை எதிர்ப்பதென்று முடிவு செய்தது.

திருத்தப் பிரேரணை சபைக்கு வரும் போது விவாதத்தில் கலந்து கொள்வதா இல்லையா என்பது பற்றி இன்று காலையில் கூட்டணி பாராளுமன்றக்குழு கூடி முடிவெடுக்கும். அனேகமாக திருத்த மசோதாவை எதிர்க்கும் மகஜர் ஒன்றை சபையில் சமர்ப்

(5-ம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் தபால் நிலையத்தில் மற்றொரு கொள்ளை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் தபால் கந்தோருக்கு முகமூடியணிந்து சென்ற நான்கு இளைஞர்கள், தபாலதிபரை கட்டிவைத்ததுடன் அவரது மனைவி, குழந்தையையும் அறையில் பூட்டிவிட்டு சுமார் 2000 ரூபா ரொக்கப்பணம், முத்திரை, கைக்கடிகாரம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சுழிபுரம் தபாற்கந்தோர் அதிபராக நியமனம் பெற்று வந்த என். வீரசிங்கமும், அவரது மனைவி, பிள்ளைகளும் தபாற்கந்தோர் மேல்மாடியிலுள்ள விடுதியில் படுத்திருந்த சமயம், நேற்று அதிகாலை 1 மணிக்கு, மதில் சுவரினல் மேல்மாடிக்கு ஏறிச்சென்ற இளைஞர்கள் கதவைத்தட்டினர்கள் என்றும், தபாலதிபர் கதவைத் திறந்தபோது துப்பாக்கிமுனையில் அவரைப்பணயம் வைத்து கீழ்ப்பகுதியில் உள்ள தபாற்கந்தோருக்குக் கூட டிச்சென்றனரென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது

மனைவியையும் பிள்ளைகளையும் மேல்மடி விடுதிக்குள் வைத்துப்பூட்டி காவலரைசத்தம் போடக்கூடாது என எச்சரித்துவிட்டுச் சென்ருர்கள் என்றும் கூறப்படுகிறது

தபாற்கந்தோருக்குள் துப்பாக்கிமுனையில் தபாலதிபரைக் கூட்டிச்சென்ற இளைஞர்கள், அங்கிருந்த ரொக்கப்பணம் 1500ரூபா, முத்திரைகள் யாவற்றையும் கொள்ளையடித்தனரென்றும் கூறப்படுகிறது.

இளைஞர்களில் மூவர் சாரம் அணிந்திருந்தனரென்றும், ஒருவர் பெல்பொட்டம் அணிந்து

[6-ம் பக்கம் பார்க்க]

நாயன்மார்கட்டில் சம்பவம்

## கேரதீவு பஸ்ஸை கடத்தி கூட்டுறவு ஊழியரிடம் ரூ. 28,000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கி முனையில், தனங்கிளப்பு சந்தியில் இ.போ.ச. பஸ்ஸை கடத்திய இளைஞர்கள் பஸ்ஸிலிருந்த கூட்டுறவுச் சங்க ஊழியரிடமிருந்து 28,000 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

நேற்றுக்காலை 9 மணிக்கு கேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்ட பஸ்ஸை தனங்கிளப்புச் சந்தியில் நான்கு இளைஞர்கள் மறித்தனரென்றும், சில பிரயாணிகளை அவ்விடத்தில் இறக்கியபின் பஸ்ஸைக் கடத்திச் சென்ருர்கள் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதே பஸ்ஸில் பூநகரி நோ. கூ. சங்கத்திற்குரிய 19,000 ரூபா ரொக்கப் பணத்தையும் 9.000 ரூபா காசோலையையும் காசாளர் திரு பொன்னுத்துரை கொண்டுவந்தாரென்றும் தெரியவந்துள்ளது

சாரதி கே. தம்பையாவையும் கண்டக்டர் வி. ஞானசேகரத்தையும் துப்பாக்கிமுனையில் பஸ்ஸில் பணயம் வைத்து இளைஞர்கள் பஸ்ஸைச்செலுத்திச் சென்ருர்களென்றும் நாயன்மார்கட்டு கனகரத்தினம் வீதிக்கருகில் பஸ்ஸை மறித்துவிட்டு, கூட்டுறவுச் சங்க ஊழியர் வைத்திருந்த பணத்தையும், காசோலையையும் பறித்து கொண்டுசென்றுவிட்டார்கள் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இத்தகவல் கிடைத்ததும், பொலிசாரும், இராணுவத்தினரும், நாயன்மார்கட்டு பகு

[6-ம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிமுனையில் பிரயாணிகளிடம் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கி ஏந்திய இளைஞர்களால், பஸ்பிரயாணிகள் கொள்ளையடிக்கப்பட்டனர், இச்சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கி சூட்டினல் பஸ் சாரதி கந்தையா பாலசிங்கம் காயமடைந்தார் இச்சம்பவம், நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு இருபாலையில் நடந்தது

யாழ்ப்பாணத்திலிருந்து இராசவீதிவழியாக அச்சுவேலி நோக்கிச் சென்ற கடைசி பஸ்ஸிலேயே இச்சம்பவம் நடந்தது

துப்பாக்கி முனையில் பிரயாணிகளிடம் கொள்ளையடிக்கப்பட்டபோது பஸ்ஸிலிருந்த கண்டக்டர் நாகலிங்கம் செல்வநாயகத்திடமிருந்த 25 ரூபாவை ஒரு இளைஞர் பறித்துக்கொண்டதுடன் அவரிடமிருந்த ரிக்கட் புத்தகத்தையும் பறித்தனரென்றும் கூறப்படுகிறது

இருபாலை சந்தியை இரவு 10-15 மணியளவில் பஸ் அடைந்தபோது பெண்களில் ஒருவர் தான் அணிந்திருந்த சுமார் 15 பவுண் நிறையுள்ள தாலிக்கொடியையும், தங்க நகைகளையும் கழற்றி பஸ் ஆசனத்திற்குகீழ் போட்டுவிட்டதால், அவரின் நகைகள் தப்பியதாம், பஸ்ஸிலிருந்த மற்றொரு வயோதி மாதும், சிறுமியும், நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை

பஸ் பிரயாணிகள் ஒவ்வொருவரிடமும், இளைஞர்கள் சென்று துப்பாக்கிமுனையில் 'எடுங்கள், எடுங்கள்' என்று

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EN ஐயாயிரம் தொடரிலக்க முள்ள மொறிஸ்மைனர் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை. தம்பிஐயா 40/2, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1687

### கல்வி

யாழ் நகரின் சிறந்த தொழில்நுட்ப நிறுவனம், குளிரூட்டல் கல்வி (Refrigeration and Air Conditioni g) கற்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முடிவு திகதி 28-2-79. I. A.R 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1708

### WANTED

Wanted Accountant / Book-keeper part qualified or well experienced for the post of Accountant / Bookkeeper for immediate employment Salary around Rs 1000/-. negotiable. Apply Autos Ltd. 190, Hospital Road, Jaffna. 1706

### சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் (வரைவுள்ளது) சுன்னாகம்

### அறிவித்தல்

மேற்படி சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், சுவீப்பிங்மா, வெற்றுப்பரல், கழிவு சீனி, கழிவுப் பொருட்கள் ஆகியனவும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன. வெற்றுச் சாக்குகளுக்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/-ம், ஏனையவற்றிற்கு மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 50/-ம் காரியாலய வேலைநாட்களில் தலைமை அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 27-2-79 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.
20-2-1979. 1707

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## 4 தளபதிகளுக்கு தூக்கு

தெஹ்ரான், பெப். 21

ஈரானில் மேலும் நான்கு முக்கிய முன்னாள் இராணுவத் தளபதிகள் தூக்கிலிடப்பட்டனர் என்று புரட்சி வானொலி நேற்று அறிவித்தது. [இ]

## தண்டனை குறைப்பு

சென்னை, பெப். 21

கருத்தடை சத்திர சிச்சை மேற்கொள்ளும் சிறைக் கைதிகளுக்கு தண்டனையைக் குறைக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

கருத்தடை சத்திரசிகிச்சை செய்துகொள்ளும் கைதிகளுக்கு 15 நாள் முதல் ஒருஆண்டு காலம் வரை தண்டனை குறைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. [இ]

தயாரித்தவர்: க.குணரத்தினம் மனுதார் சட்டத்தரணி

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில் காலஞ்சென்ற வட்டுக்கோட்டை பொன்னம் பலம் முத்தையா பொன்னம் பலம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தி வர் வட்டுக்கோட்டை மேற்கு பொன்னம்பலம் கைம்பெண் கமலாம்பிகை மனுதார்.
மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல 3423

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப் பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதி மன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன்முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்:
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979ஆம் ஆண்டு தைமாதம் 19ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 1692

---

சகாயர் நாடகாலயம் அளிக்கும் இரு நாடகங்கள்

கலையரசு சொர்ணலிங்கம் மாப்பிள்ளை தேவை என்ற நாடகத்தைப் பற்றி கூறுகிறார்:- "இது ஒரு புதுமையான நாடகம். ரொம்ப நல்லாயிருக்கு".

**23-2-1979 வெள்ளி மாலை 6-30 மணிக்கு**

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

நவீன நடன - இசை - நகைச்சுவை நாடகம்

## மாப்பிள்ளை தேவை

டாக்டர் கருணாநிதியின்

## 'சோக்கிரட்டீஸ்'

மாப்பிள்ளை தேவை நாடகத்தைப் பற்றி கலாநிதி அ. சண்முகதாஸ் பி. ஏ. பி. எச். டி. விமர்சனம் செய்வார்.

வித்துவான் க ந வேலன் சிறப்புரைநிகழ்த்துவார் கலையரசு சொர்ணலிங்கம் தலைமை வகிப்பார்.

நடிகர்கள்: அருமை - ஜெயவசந்தினி
ஐசக் இன்பராசா - ரும் மற்றும்பலர்

கதை - வசனம் - பாடல் தயாரிப்பு: கலைஞர் அருமை

இயக்குநர்: இயக்குநர் மாமணி அ. நற்குணசேகரன்

**பிரவேசம்:- ரூபா 10/-, 5/-**

1686

---

### இன்று நினைவு தினம்:

# பிரபு பேடன்பவல்

- பொ. ஸ்ரீஸ்கந்தராசா -

நினைவு கூரும் ஒவ்வொரு பெரியாரும் தம் வாழ்நாளில் தமது சமூகத்திற்கோ தமது நாட்டிற்கோ உலகம் முழுவதிற்குமோ தொண்டினைச் செய்து இறவாத புகழினைப் பெற்றுக் கொள்கின்றனர். இன்று நினைவு கூரும் பிரபு பேடன் பவல் தினம் நம் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதிலிருந்து அவரது தொண்டும் புகழும் தெளிவாகின்றது உலகம் நினைவுறும் அளவிற்கு அவரது சாதனை தான் என்ன? துடிப்பும் வைரநெஞ்சும் சேவையின் அடித்தளமாய் இருந்ததுதான் காரணம்.

1857-ஆம் ஆண்டு மாசி மாதம் 22-ம் திகதி லண்டனில் பிறந்த இவர் தனது 12-ம் வயதில் காட்டர் ஹவுஸ் பாடசாலையில் இரண்டாண்டுகள் பயின்ற பின் வனங்களில் வளமற்ற வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டார் பாடசாலைவாழ்க்கையைமுடித்துக் கொண்ட அவருக்கு இராணுவ சேவைகாத்திருந்தது.

விருப்பிய தொழில் கிடைத்தமை வாழ்க்கையில் இவருக்குக் கிடைத்த பெரும் வெற்றி யாகும் விறுவிறுப்பும் வீர சுபாவமும் கொண்ட சேவையினை ஆற்ற இவருக்கு பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. (Zu u) சூலு யுத்த காலத்தில் மோகிலா பிரதேசத்தில் புது அனுபவங்களைப் பெற்றார். தன்னம்பிக்கை துணிவு ஆகியவற்றைக் கொடுத்த பயங்கர அனுபவத்தை ஆபிரிக்காவில் போயர்களுக்கு [Boers] எதிராக நடாத்திய யுத்தத்தில் பெற்றார் 217 தினங்கள் போராடி மேபிங் நகரைக் காப்பாற்றினர்.

இவரது போர் அனுபவங்களைப் பற்றி அறிய இளைஞர்கள் அணுகினர் ஆலோசனைகள் வழங்கினார் தமது ஆலோசனைகள் சரியானவையா என் பதனைப் பரிசீலிக்க பிவுன்சி பாசறைக்கு பலதரப்பட்ட இளைஞர்களை அழைத்துச் சென்று செயற்பட்டார்.

அடுத்து பூல் துறைமுகத்தில் நடாத்தியபாசறைத்தியே சாரணிய இயக்கத்தை ஆரம்பிக்க வித்திட்டது.

1907ல் முதன்முதலாக பிறவுன்ஸி தீவில் பாசறைத் தீ ஏற்படுத்தப்பட்டது. ஏன் பாசறைத் தீ நிகழ்ச்சி நடாத்தப்படவேண்டுமென்றும் உணரப்பட்டது.

84 வருட வாழ்க்கையில் பின் 83 வருடத்தைச் சாரணிய இயக்கத்திற்காகவே அர்ப்பணித்து வாழ்ந்த இவர் ஆபிரிக்காவில் சாரணியத் தொண்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இறக்க நேரிட்டது. கென்யா மலைச்சிகரத்திலேயே இவரது உடல் அடக்கஞ்செய்யப்பட்டது.

## வல்வையில் கல்விமன்றம்

(புலோலி)

வல்வையில் கல்வி மன்றம் ஒன்று ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் உடுப்பிட்டி எம்.பி. திரு. த. இராசலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

வல்வெட்டித்துறை சன சமூக சேவா நிலையத்தினரால் நடத்தப்படவுள்ள இக்கல்வி கன்றத்தில் வசதிகுறைந்த மாணவர்களுக்கு இலவசமாக கல்வி போதிக்கப்படவுள்ளது.

## பிரிவுபசாரம்

(பண்டத்தரிப்பு)

கடமைஉணர்ச்சியும் சேவை மனப்பான்மையும் அனைவரோடும் அன்பாகப்பழகும் பண்பும் நிறைந்த எமது தபால் நிலைய அதிபரும் தபால் உதவி அதிபரும் எமது நெஞ்சங்களில் என்றும் நிறைந்து இருப்பார்கள்.

இவ்வாறு கடந்த 4 ஆண்டுகளாக மானிப்பாய் தபால் அதிபராகக் கடமையாற்றி களுவாஞ்சிக்குடிக்கு இடமாற்றம் பெற்ற திரு. ஏ. செபஸ்தியனுக்கும் உதவித்தபால் அதிபராக கடமையாற்றி புத்தளத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் திரு எஸ் தாமோதரம்பிள்ளைக்கும் சுன்னாகத்திற்கு பதவிஉயர்வு பெற்றுச்செல்லும் இரண்டாவது உதவித் தபால்அதிபர் திரு. வி சத்தியமூர்த்திசர்மாவுக்கு நிலைய ஊழியர்களினாலும் மானிப்பாய் பிரிவிலுள்ள உபதபால் அதிபர்களினாலும் அளிக்கப்பட்ட பிரிவுஉபசாரத் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கட்டுடை உபதபால் நிலைய அதிபர் திரு என். இராசரத்தினம் குறிப்பிட்டார்.

மானிப்பாய் தபால் நிலையத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு திரு. ஏ விநாயகமூர்த்தி தலைமை தாங்கினார். மூவரும் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவு உபசாரத்திற்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள். (உ)

## முன்னாள்பொலிஸ்சார்ஜன்ட் தாக்குதலுக்குப்பலி!

(யாழ்ப்பாணம்)

தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கும் பிரச்சனை தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து விவசாயத்திலீடுபட்டுவந்த இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் தாக்குதலுக்குப்பலியானார்.

கட்டுவனைச் சேர்ந்த இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் இளையதம்பி சின்னத்தம்பி என்பவர் தலையில் பலத்த காயத்துடன், இம்மாதம் 15ம் தேதி யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

கிடங்கு ஒன்றில் நீரிறைக்கும் யந்திரத்தை இயக்குவது தொடர்பாகக் கட்டுவனைச் சேர்ந்த செல்லப்பா சுப்பிரமணியத்திற்கும்அவரது சகோதரி அருளானந்தம் சிவபாக்கியத்தும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் இடையில் சென்ற சின்னத்தம்பி தான் அந்தக்கிடங்கைப் பாவித்து நீரிறைக்கப்போவதாகக் கூறியதைத் தொடர்ந்து சந்தேக நபரான செல்லப்பா சுப்பிரமணியத்திற்கும் சின்னத்தம்பிக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. சந்தேகநபர் சின்னத்தம்பியைத் தாக்கியதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## பிஸ்கால் ஏலவிற்பனை

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம்: 5278
1. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
2. பெண் சரஸ்வதி, மீசாலை தெற்கு, மீசாலை.

வழக்காளி

எதிராக

1. குழந்தைவேலு கதிரவேலு, மலாயன் கபே, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
2. மனைவி சிவயோகம், புகையிரத வீதி, கோண்டாவில்.

எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் தீர்வைப்படி ரூபா 7662-00ம் முதல் ரூபா 4500/ற்கு 12 வீதப்படி 7-2-78 — 5-7-78 வரையுள்ள வட்டி ரூபா 225-00ம் அதன் பின் கட்டிய தொகையாகிய ரூபா 7887-00ற்கு 9 வீதப்படி 5-7-78 — 15-2-79 வரைக்குமுள்ள வட்டி ரூபா 476/22 சதமும் வழக்குச் செலவு 508-40 சதமும் சேர்ந்து ரூபா 8871-62 சதத்திற்கு கீழ்க்காணும் அட்டவணையில் காணும் நெல்லை 14-3-79 பிற்பகல் 2-00 மணிக்கு தொடங்கி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் என்னால் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வழக்கு இல. 5281
வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
மீசாலை தெற்கு, மீசாலை.

வழக்காளி

எதிராக

1. குழந்தைவேலு கதிரவேலு, மலாயன் கபே பெரிய கடை, யாழ்ப்பாணம்.
2. மனைவி சிவயோகம், புகையிரத வீதி, கோண்டாவில்.

எதிராளிகள்

மேற்படி இலக்க வழக்கின் தீர்வைப்படி ரூபா 7210-67 சதமும் முதல் ரூபா 4000/-க்கு 12 வீதப்படி 13-2-78 - 27-7-78 வரைக்குமுள்ள வட்டி ரூபா 240/-ம் அதன் பின் கட்டிய தொகையாகிய 7450-67ற்கு 9 வீதப்படி 27-7-78 — 15-2-79 வரைக்கும் உள்ள வட்டி ரூபா 335-28 சதமும் வழக்குச் செலவு ரூபா 469-70 சதமும் சேர்ந்து ரூபா 8255-65 சதத்திற்கு கீழ்க்காணும் அட்டவணையில் காணும் நெல்லை 14-3-79-ந் திகதி பிற்பகல் 2-00 மணி தொடங்கி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் என்னால் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### நெல்லின் விபரம்

முதலாம் எதிராளிக்குச் சொந்தமான பரந்தன் கோரக்கன் கட்டில் உள்ள 40-ம் நம்பர் 15 ஏக்கர் மேச்சல் தரை வயலில் 1978/79-ம் காலபோகச் செய்கையில் கைப்பற்றப்பட்ட,

| | | |
|---|---|---|
| தூற்றிய நெல் | — | 102 மூடை |
| தூற்றாத நெல் | — | 39 முழு மூடை |
| | | 1 குறை மூடை |

வி. சிவசுப்பிரமணியம்,
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

19-2-79. 1696

# மக்கள் கருத்து

## ஓர் இமாலயச் சாதனை

"ஈழநாடு" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். 20 வருடங்கள் என்பது குறைந்த காலஅளவல்ல ஈழத்துப் பத்திரிகை உலகில் மாத சஞ்சிகைகள்கூட ஒரு வருடம், இரு வருடம் தாக்குப்பிடிக்காமல் வியாபாரச் சந்தையில் வீழ்ச்சியுறுகின்ற காலத்தில் தலைநகருக்கு வெளியே வரும் ஒரேயொரு தனித்துவமான தினசரி ஒன்று 20 வருட காலத்தைக் கடந்தது வெற்றிவாகை சூடியது என்றால் அதை ஓர் இமாலயச் சாதனை என்றே கூறவேண்டும்.

தலைநகருக்கு வெளியே தொலைபேசி வசதிகள் சீர்குலைந்த யாழ்ப்பாணத்தில் அரசாங்க விளம்பரங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் மக்களின் ஆதரவையே மாத்திரம் நம்பித் தினசரி வெளியிடுவதென்றால் ஒரு சிரமமான காரியம் அந்தச் சிரம காரியத்தில் வெற்றிநடை போடுகின்ற 'ஈழநாட்டின்' வளர்ச்சியை வாயார, மனமார வாழ்த்துகின்றோம்.

மற்றைய பத்திரிகைகள் போல் வியாபாரத்திற்காகச் செய்திகளைத் திரித்து வெளியிடாமல் உண்மையை உண்மையாக எழுதும் 'ஈழநாடு' யாழ்ப்பாணத்தவர் மத்தியில் உண்மைச் செய்திகளைத் தரும் ஒரேயொரு தினசரியாக விளங்குகிறது 'ஈழநாடு' மேலும் பல்லாண்டு வாழ்க.

எஸ். ரி. வரதராசன்
வடகோவை.

0 0 0

## இன்றைய பலன்

மாசிமாதம் 10-ம் திகதி
(22-2-1979)
வியாழக்கிழமை

மேடம்: அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள் விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். எதிர்பாராத பணம்கைக்குக்கிடைக்கலாம்.

இடபம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம் பெறலாம். தூற்றல்களைப் தொடுப்பதற்குஎதிரிகள்காத்திருப்பர். பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும் எதிலும் முன்யோசனை விரும்பத்தக்கது.

மிதுனம்: பசுமையான சம்பவம் நடைபெறும். களஸ்திர வகையால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கும், நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத்தரும். நிதானம் வேண்டும்.

சிங்கம்: பெரியவர் ஒருவரின் ஆதரவுகிடைக்கும். தெய்வத்தின் அருளும் உண்டு இலட்சியப்பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

கன்னி: வித்தையில் வெற்றிகாணும் வேண்டியது கிடைக்கும். பொதுமக்கள் தொடர்புடன் புகழ்வந்து சேரும். உயர்தொழிலுக்கும் இடமுண்டு.

துலாம்: மெத்தவும்பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும். தித்திக்கும் செய்தியுடன்தேனைவாழ்வும் உண்டு.

விருச்சிகம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உந்தும். ஏமாற்றம் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும், நிதானம்வேண்டும்.

தனுசு: அவசரபுத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். சகோதரவழிச் சுகாதாரமும் வேண்டும்,

மகரம்: வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சில புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல் நலம் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் கவனமாக இருக்கவும்.

கும்பம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத்தரும் தொழில்துறையிலும் பின் தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

மீனம்: மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும், அறவழிநாட்டம் உண்டு

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கடவுளின் பெயரால் மதுபான நிலையமா?

இணுவிலில் காங்கேசன் துறை வீதியிலுள்ள மதுபான விற்பனை நிலையமொன்றிற்கு தெய்வத்தின் பெயரிடப்பட்டுள்ளது. அவ்வுரிமையாளருக்கு வேறு பெயர் அகப்படவில்லையா? கடவுளின் பெயரால்தான் மதுபானநிலையம் ஸ்தாபிக்கவேண்டுமா?

இது சைவசமயத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக உள்ளது. இச்செயலினால் ஏனைய மதத்தினர் சைவமதத்தினர் மீது எள்ளி நகையாடுவதற்கு இடமேற்பட்டுள்ளது. இவ்விஷயம் சம்பந்தமாக அகில இலங்கை இந்து மாமன்றம், சைவபரிபாலன சபை, இணுவில் இந்து இளைஞர் மன்றம் ஆகியன உரிய நடவடிக்கை எடுத்து, அப்பெயரை மாற்றுவதற்கு ஆவன செய்வார்களா?

சைவ அனுதாபிகள்
சுன்னாகம்

## கீரிமலை நகுலேஸ்வர ஆலய உற்சவம்

(மாவிட்டபுரம்)

சரித்திரப்பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமானது.

மூர்த்தி தலம் தீர்த்தங்களால் சிறப்புப் பெற்ற இவ்வாலய உற்சவம் தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெற்று இம்மாதம் 25ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

# "இலங்கை - இந்தியக் கூட்டுமுயற்சியில் தமிழ்க்கலை உலகச்சிறப்பு எய்தப்பாடுபட வேண்டும்"

-- அமைச்சர் தொண்டமான்

[வெள்ளவத்தை]

"ஐக்கிய முன்னணி ஆட்சி செலுத்திய ஏழுஆண்டு காலங்களிலும் தமிழகத்திற்கும் ஈழத் திருநாட்டிற்கும் இருந்த கலை இலக்கியத் தொடர்புகளைக் கட்டுப்படுத்தியும் நிறுத்தியும் இருந்தது இந்த அரசின் தார்மிக முயற்சியினால் இத்தொடர்பின் காரணமாக இன்று தமிழக கலை இலக்கியங்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள், ஆத்மீகவாதிகள் இங்கு வருகை தரமுடிகிறது

இவ்வாறு கிராமிய கைத்தொழில அமைச்சர் திரு. தொண்டமான் "மௌன ராகங்கள்" என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்துஉரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை முத்துராமன் ரசிகர்மன்ற ஆதரவில் நடிகர் முத்துராமன் முன்னிலையில் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நாடகம் மேடையேறியது.

மேலும் அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:

"இந்தக் கலைப்பாலம் ஒரு வழிப்பாதையாக மாத்திரம் அமைந்துவிடாமல் இரு சாராரும் பயன்பெறும் விதத்தில் அரசு கொண்டிருக்கும் நோக்கம் சிறந்ததாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கலை, இலக்கியக்கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்க்கலை உலகளாவிய சிறப்பெய்த கலைஞர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். கலைச் செல்வங்கள் எங்கிருந்தாலும் அவர்களின் திறமைகள் வரவேற்கப்படவேண்டும் அதே போல் நமது திறமைகளும் வெளிநாடுகளில் மதிக்கப்படவேண்டும்.

"சரித்திர காலந்தொட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பிரிக்க முடியாத ஆத்மீகத் தொடர்புகள் இருந்து வருகின்றன. இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயமும், இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயமும் நமது நட்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

"நமது நாட்டில் நடிகர்முத்துராமன் போன்றவர்கள் உருவாகி தமிழகம்சென்று இவ்வாறு புகழ் எய்துதல் வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரையும், நடிகர் முத்துராமனையும் வரவேற்று நாடகக்கலைஞர் அந்தனிஜீவா வரவேற்புரை நிகழ்த்தினர்,

தமிழகத்தின் பிரபல தொழில் அதிபரான பன்னீர் தாஸ் சகோதரர்களான திரு. வி ஜி. சந்தோஷன் விசேஷ அழைப்பின்பேரில் கலந்து கொண்டார்.

### கலைஞர்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும்

நாடகஇறுதியில் திரு.முத்துராமன் பேசுகையில் "இலங்கைக் கலைஞரின் திறமையை நேரில்காணும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவர்களுக்குஎன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நாடகத்தில் சிறுபாத்திரங்களில் நடிப்பவர்கள் எதிர்காலத்தில் மிகப் பெரிய வாய்ப்புக்கிடைக்கும். ஆரம்ப

(5-ம் பக்கம் பார்க்க)




# சீன-வியட்நாம் எல்லையில் தொடர்ந்தும் கடும்போர்!

# சீனப்படைகள் வாபஸ் பெறப்படவில்லை

## வெளிநாட்டு அமைச்சு முன்னர்வந்த செய்திக்கு மறுப்பு

பீக்கிங், பெப். 21

சீன-வியட்நாம் எல்லையில் இருநாட்டுப்படைகளுக்குமிடையே கடும்சண்டை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும் சீனப்படைகள் வியட்நாமிலிருந்து இன்னமும் வாபஸ் பெறப்படவில்லை என்றும் அப்படைகள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்றும்சீன வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

சீனத்துருப்புக்கள் வியட்நாமிலிருந்து வாபஸ் பெறப்பட்டுள்ளதாக சீன வெளிநாட்டமைச்சர் பீக்கிங்கில் உள்ள பெனின் தூதுவரிடம் கூறியதாக வெளிவந்த செய்திகளை சீனா வன்மையாக மறுத்துள்ளது. உதவி ஒரு மாகாணத் தலைநகர் உட்பட 5 மாகாண எல்லைப் பிரதேசங்களைத் தமது படைகள் கைப்பற்றியுள்ளதாகவும் சீனா அறிவித்துள்ளது.

### குடிமக்கள் வெளியேற்றம்

சீனப்படைகளின் அகோரத் தாக்குதலினல் எல்லைப்பகுதியில் உள்ள மக்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேறி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

### வியட்நாமின் விமானப்படைகள் எதிர் தாக்குதல்

வியட்நாம் படைகள் விமானப்படையினரின் உதவியுடன் எதிர்த் தாக்குதலை நடத்தி வருகின்றனர் என்று ஹனேய் வானெலி அறிவித்துள்ளது [இ]

## இஸ்ரேல் - எகிப்து பேச்சு மீண்டும் நடைபெறும்

### அமெரிக்காவில் தயான், கலீல்

வாஷிங்டன், பெப். 21

மத்தியகிழக்கு விவகாரம் குறித்து தடைப்பட்ட எகிப்து—இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் பொருட்டு இரு நாட்டு அமைச்சர்களும் அமெரிக்கா சென்றுள்ளனர்.

இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் ஜெனரல் மொஷே தயானும் எகிப்திய பிரதமர் ஜனுப் முஸ்தபா கலீலும் இன்று காம்ப் டேவிட்டில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னைய காம்ப்டேவிட் மகாநாட்டை விட இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் அதிக பலாபலன்கள் கிடைக்கும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். [இ]

## ஈரான் புரட்சியாளர் மத்தியில் பிளவு?

தெஹ்ரான், பெப். 21

ஈரானிலுள்ள இடதுசாரிக் கொரில்லாக்கள், புரட்சியின் எதிரிகள், சந்தர்ப்பவாதிகள் என்று சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனி வானெலியில் தெரிவித்துள்ளதையடுத்துப் புரட்சிவாதிகளிடையே பிளவுதோன்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இடதுசாரிக் கொரில்லாக்கள் முஸ்லிம்கள் அல்லர் என்றும் இவர்கள் இஸ்லாத்துக்கு எதிரானவர்கள் என்றும் அயத்தொல்லா கொமேனி தெரிவித்துள்ளதையடுத்தே புரட்சிவாதிகளிடையே பிளவு தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ]

## ஸ்ரீநகரில் கடும் பனி

புதுடில்லி, பெப். 21

கடும் பனி வீழ்ச்சி காரணமாக ஸ்ரீநகருக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமிடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. [இ]

## பூட்டோவின் இறுதி அப்பீல்: 9 நீதியரசர்களை நியமிக்கவும்

### வழக்கறிஞர்கள் கோரிக்கை

கராச்சி, பெப். 21

பாகிஸ்தான் முன்னள் பிரதமர் ஜனுப் அல்பிகார் அலி பூட்டோவின் மரணதண்டனை மீதான இறுதி அப்பீல் மனுவை விசாரிக்க 9 நீதியரசர்களை நியமிக்குமாறு ஜனுப் பூட்டோவின் வழக்கறிஞர்கள் பாகிஸ்தான் அரசைக் கோரியுள்ளனர்.

வழக்கறிஞர்கள் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஜனுப் பூட்டோவின் முன்னைய அப்பீல் மனுவை விசாரிக்கமென 9 நீதியரசர்களை நியமித்துவிட்டு இறுதியில் இருவர் நீக்கப்பட்டு ஏழு

[5-ம் பக்கம் பார்க்க]

## லெனின் ஞாபகார்த்த மியூஸியத்தில் இலங்கைத் தூதர்

மாஸ்கோ, பெப் 21

"மாபெருந் தலைவரான லெனின் தனது இறுதி நாட்களைக் கழித்த ஸ்தலத்திற்கு நான் மேற்கொண்ட இந்த விஜயத்தை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்ருகக் கருதுகிறேன். இது எனக்கு ஒரு சுவாரஸ்யமிக்க அனுபவமாகும்" என சோவியத் யூனியனிலுள்ள இலங்கை ஸ்தானிகர் டாக்டர் ஆர். சி. ஏ. ஜோன்புள்ளே கார்க்சி நகரிலுள்ள லெனின் ஞாபகார்த்த மியூஸியத்திற்குத் தாம் மேற்கொண்ட விஜயம் பற்றி ஏ. பி. என். நிருபரிடம் விவரிக்கையில் கூறினர்.

சோவியத் வெளிநாட்டமைச்சின் தென் கிழக்காசிய இலாகாவினல் ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி விஜயத்தின்போது இலங்கை ஸ்தானிகருடன் சோவியத் யூனியனிலுள்ள பங்களாதேஷ் ஸ்தானிகர் ஜனுப் மிர்சா நஷீத் அஹமத் கூடச் சென்றிருந்தார்.

லெனின் இறக்கும் தறுவாயில் அவரது வாசஸ்தலத்தில் இருந்த பொருட்கள் எந்த நிலையிலிருந்தனவோ அவை அவ்வாறே இன்றுவரை பேணப்பட்டுவருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [இ]

## அமெரிக்க அணுஎரிபொருள் விநியோகத்தில் தாமதம்

### இந்தியா யு. எஸ். தூதரிடம் கவலை

புதுடில்லி, பெப். 21

இந்திய—அமெரிக்க ஒப்பந்தத்திற்கமைய இந்தியாவுக்கு அணுசக்தி எரிபொருளை விநியோகிப்பதில் அமெரிக்கா தொடர்ந்தும் தாமதம் செய்து வருவது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் குறித்து இந்தியா இரண்டு தடவைகள் விண்ணப்பித்திருந்தும் அமெரிக்கா தாமதம் காட்டி வருகின்றது என்று புதுடில்லியில் உள்ள அமெரிக்க தூதுவரிடம் கவலை தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க தூதுவரை இந்திய வெளிநாட்டு அமைச்சுக்கு அழைத்து அமெரிக்கா மீதான புகார் தெரிவிக்கப்பட்டது. [இ]

# முதன் மந்திரியும் அரச ஊழியரே

## இந்திய சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, பெப். 21

முதன்மந்திரிகளும் மந்திரிகளும் அரசாங்க ஊழியர்களே என்று இந்திய சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.

முதன் மந்திரிகளினதும் மந்திரிகளினதும் அந்தஸ்து எப்படியிருந்தபோதும் அவர்கள் மாநில கவர்னருக்குக் கீழ்ப்படிந்து தான் பணியாற்ற வேண்டும். எனவே அவர்களும் அரசாங்க ஊழியர்களே என்றும் சுப்ரீம் கோர்ட் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. [இ]

"அபிவிருத்தி வேலைகள்

# பின்தங்கிய சமூகமக்கள் வாழும் இடங்களுக்கு முதலிடம்"

-- நல்லூர் 'சிவா'

[அரியாலை]

இராம மின்சார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நல்லூர்த் தொகுதியில் கோண்டாவில் கிராமத்துக்கு அதுவும் பின்தங்கிய பகுதியாக இருக்கும் இப்பகுதிக்கு மின்சார வேலைகளை மேற்கொண்டு வேண்டிய உபகரணங்களை உடனுக்குடன் வழங்கி குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகவே இவ்வேலைகளை முடித்துத்தந்த வடபகுதி மின்சாரப்பகுதியினருக்கும் விசேஷமாக மின்பொறியியலாளர்களுக்கும் அதற்காக உழைத்த சகலருக்கும் நன்றி கூறுகின்றேன்."

நல்லூர்த் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. எம் சிவசிதம்பரம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணசன சமூக நிலைய மண்டபத்திற்கு மின்பொத்தானை அழுத்தி மின் விளக்கை ஏற்றி வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. எஸ் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றமேற்படிவைபவத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது; "மின்சாரம் கிராமத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. விவசாயத்துக்கு வேண்டிய நீரிறைப்பு இயந்திரங்களை மின்சாரம் மூலம் இயக்குவதினல் எண்ணெய்க்குச் செலவிடும் பணத்தில் பெரும்பகுதியை மிச்சப்படுத்தலாம். அத்துடன் கிராமங்களில் லாபந்தரக் கூடிய சிறிய கைத்தொழில்களை ஆரம்பித்து நடத்தலாம். இவ்வகையில் போதிய பணவசதி இல்லாதவர்களுக்கு வங்கி மூலம் கடனெடுக்க உதவிகள் செய்ய நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் தொகுதிகளில் மேற்கொள்ளும் அபிவிருத்தி வேலைகளில்பின்தங்கிய சமூக மக்கள் வாழும்பகுதிகளுக்குமுதலிடம் அளிக்க வேண்டும் என்ற கொள்கை ஏற்றுக் கொண்டு அதனைச்செயல்படுத்தி வருகிறார்கள் ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசிய மகாநாட்டில் கடந்த அக்டோபர் மாதம் தமிழ் மக்களிடையே இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திர்மானித்திருந்தும் இது சம்பந்தமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் திரு அமிர்தலிங்கம் நாட்டில் இல்லாத காரணத்தாலும் இதனைச் செயல் படுத்த முடியாமல் போய்விட்டது. எவ்வளவு கெதியில் இதனைச் செய்ய முடியுமோ அதனைச் செய்ய நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

சிறுபான்மைத்தமிழ் மக்கள் தமிழர் கூட்டணியைப்பலப்படுத்தி உள்ளே இருந்து சமூக ஏற்றத்தாழ்வுகளை முற்ருக ஒழிக்க கைகொடுத்து உதவ வேண்டும் என்ற குறிப்பிட்டார்.

சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் திரு. இராசேந்திரா பேசுகையில், "லயன்ஸ் கழகம் 'தொண்டு செய்வோம், உயர்வடைவோம்' என்ற குறிக்கோளுடன் செயல்பட்டுவருவதாகவும், இக்கிராம மக்களின் வளர்ச்சிக்கு எமது கழகம் இதுவரை ஆற்றிய பணிகளுடன் தொடர்ந்தும் உதவிசெய்யும் என்றும், இக்கிராம மக்களின் முன் மாதிரியைப்பின்பற்றி ஏனைய கிராம மக்களும் முன்னேற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கோண்டாவில் கிராமசேவகர், திரு. கனகலிங்கம், நிலைய உபதலைவர்கள் திருவாளர்கள் க. கிருஷ்ணராசா, செ. விசுவலிங்கம், மின் பொறியியலாளர் திரு. செல்வரத்தினம் ஆகியோர் பேசினர்.

ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு நிலையத்தை வந்தடைந்தது. நிலையச் செயலாளர் திரு. தம்பிஆனந்தன் நன்றி கூறினர். [க-அ]

# "தொழிற்சங்க வளர்ச்சிக்கு கட்டுக்கோப்பு அவசியம்"

[கிளிநொச்சி]

"தொழிற்சங்கங்களின்நோக்கங்கள் நிறைவுபெறுவதற்கு சங்க அங்கத்தவர்களது கட்டுக்கோப்பான ஒற்றுமையும், சங்கத்தின் தன்னலமற்ற சிறப்பான, நிர்வாகமே முக்கியகாரணமாகும்."

இவ்வாறு விற்பனை அபிவிருத்தி பொதுஊழியர் சங்கத்தை கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக்கலந்துகொண்ட, யாழ். மாவட்ட எழுதுவினைஞர்சங்க செயலாளர் திரு. செ மெற்ருஸ்மயில் குறிப்பிட்டார். இவ் வைபவத்திற்கு திரு. ஆ. பஞ்சலிங்கம் தலைமை தாங்கினர்.

திரு. மெற்ருஸ்மயில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"சங்கம் தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைக்குமிடத்து பல இன்னல்களுக்கும் சவால்களுக்கும் உட்பட வேண்டியேற்படும். அதற்கு எல்லாம் சளைக்காது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ந்து போராடினுல் அநீதி தோற்கடிக்கப்படும் நீதி வெற்றிபெறும்.

"அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் பழைய அரசாங்க ஊழியருக்கு அரசகரும மொழி தேவையில்லை என்ற கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டது நியாயமான கோரிக்கையை அன்றைய தேசியஅரசாங்கம் ஏற்று சுற்று நிருபம் 700ஐ வெளியிட்டிருந்த போதிலும் அதை அமுல்படுத்தாததினுல் தமிழ்தொழிலாளர் பலவகையிலும் அவதியுற்றனர். எனினும் மொழிவழித் தொழிற்சங்கங்கள் அத்தனையும் சேர்ந்து பழைய ஊழியருக்கு அரசகருமமொழி தேவையில்லை என்றும், பலதரப்பட்ட ஊழியர்களுக்கு சிங்களம் எந்த விதத்திலும் தேவையில்லை என்றும் வாதாடி வந்தது சங்கம் எந்த நேரத்திலும் தனது கொள்கையை விடவுமில்லை சளைக்கவுமில்லை, முடிவில் இன்று நியாயத்திற்கு வெற்றியளித்திருக்கிறது.

"பழைய ஊழியருக்குஅரசகருமமொழி தேவையில்லை என்று வாதாடிய பொழுது அங்கத்தவர்களில்பலர் பொருளாதாரக் கஷ்டங்களால் பாதிப்புறிருந்தனர். ஒருசிலரே பொருளாதார கஷ்டத்திற்கு ஆளாகியும் கொள்கைக் குன்றுகளாக இருக்கின்றுர்கள். அவர்கள் மூலமாகவே மொழிவழித் தொழிற் சங்கங்களின் கோரிக்கைகள் நியாயமானது என்று நிரூபிக்க முடிந்தது.

## இல்ல விளையாட்டுப் போட்டி

[முல்லைத்தீவு]

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இம்மாதம் 28ம் திகதி கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. (இ)

## பூட்டோவின்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நீதியரசர்களே இம்மனுவை விசாரித்தனர். அம்மனுவில் ஜனுப் பூட்டோவுக்கு எதிராக 4 பேரும் ஆதரவாக 3 பேரும் தீர்ப்பு வழங்கியிருந்தனர்.

ஒன்பது நீதியரசர்கள் அம்மனுவையும் விசாரணை செய்திருந்தால் தீர்ப்பு பூட்டோவுக்கு ஆதரவாக இருந்திருக்கும். எனவேஇறுதிஅப்பீல்விசாரணையை விசாரிக்க 9 நீதியரசர்களை நியமிக்கவும். [இ]

## இலங்கை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் நானே நாடகங்களில் வசனம் பேசாமல் மௌனமாக தர்பார் காட்சிகளில் நடித்திருந்தேன். பின்னர் நானே இல்லாமல் நாடகம் அரங்கேற முடியாத சூழ்நிலை அந்த நாடகக் குழுவிற்கு ஏற்பட்டது.

"கலைஞர்கள் ஒருநாட்டின் கண்கள். அவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும். இலங்கை தமிழ்ப்படத்துறையும் தமிழ் நாடகமும் வெற்றிகரமாக முன்னேற்றமடைந்துள்ளன" இவ்வாறு முத்துராமன் குறிப்பிட்டார். [அ]

# முல்லைத்தீவு மாதிரிக்கிராமம் 'உப்புமாவெளி'

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாதிரிக் கிராமமாக முல்லைத்தீவு-கொக்கிளாய் வீதியில் உள்ள உப்புமாவெளி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு எம் பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவினுல் தெரிவுசெய்யப்பட்டுள்ள இக்கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள் விரைவில் தரம்பிரிக்கப்படவுள்ளன.

இம்மாதிரிக் கிராமத்தில் பொதுமக்களின் உதவியுடன் சிறுவர் பாடசாலையொன்று முதலில் அமைக்கப்படவுள்ளது. (இ)

## நாய்கள் தொல்லை

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் நாய்களின் தொல்லை பொறுக்க முடியவில்லை. பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் சொந்தக்காரரின்றித் தெருத்தெருவாக அலைந்து திரியும் நாய்கள் வீதியில் சைக்கிளில் செல்லும் பிரசாணிகளைக் கலைக்கின்றன.

இதுபற்றிக் கிளிநொச்சி நகரசபையும் கவனிப்பதாகத் தெரியவில்லை. இந்நாய்களில் அநேகம் விசர் நாய்களாம் இந்நாய்களினுல் வீடுகளில் உள்ள நாய்களுக்கும் விசர் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது. [இ]

படவிமர்சனம்

## 'செவன் நைட்ஸ் இன் யப்பான்'

'யப்பானில் ஏழு இரவுகள்' படப் பெயரே கவர்ச்சியாக வுள்ளது!

புதுமை எதுவும் இல்லாத... புரட்சி எதுவும் இல்லாத முறையில் சாதாரண சிறு காதல் கதையே மேற்சொல்லும் படம்.

புதுமை... புதுமை என்றும் புரட்சியென்றும் புகுத்திப் படத்தைக்குழப்பியடிக்காமல், படத்தை ரம்மியமான முறையில், மேல்நாட்டு நாகரிகம் இழையோடும் இளஞ்சிட்டுக்களின் நெருக்கமான காதல் பிணைப்பு ஒரு அருமைதான், மின்ஒளியில் யப்பான் நகரின் வர்ணஜாலம்புரியும் எழில்; தமிழ் இசையோ ஹிந்தி இசையோவென பிரமிக்க வைக்கும் தீஞ்சுவைப் பாடல்கள், மற்றும் விறுவிறுப்பு பிரியர்களுக்கென, இடை இடையே புரட்சிக்காரரின் அட்டகாசங்கள் இத்தனையும் இணைந்த முதல்தரமான சித்திரம். படம்பார்ப்பவர்கள் முழுமையான திருப்தியடைகின்றுர்கள்.

டைரக்டர், தயாரிப்பாளர்களுக்கு தாராளமான பாராட்டுகள்.

இப்படம் இப்பொழுது யாழ் சாந்தி திரையில் காண்பிக்கப்படுகின்றது.

நகுல்

## கூட்டணி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பித்துவிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் சபையை விட்டு வெளியேறுவதென முடிவு செய்யப்படலாம் என்று தெரிகின்றது. [ம]

## குடியேற்றத் திட்டங்கள்

வவுனியா, திருக்கோணமலை மாவட்டங்களில் அரசு மேற்கொள்ளவிருக்கும் குடியேற்றத் திட்டங்களைத் தடுப்பதற்கு கூட்டணி எம்.பிக்கள் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவைச் சந்திப்பதென்றும் சுமுகமான முடிவு ஏற்படாவிடில் கூட்டணி நேரடி நடவடிக்கையில் இறங்குவதெனவும் இதுபற்றி வவுனியாவில் நடைபெறவிருக்கும் பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிப்பதெனவும் மத்தியகுழு முடிவு செய்தது.

## இராசு பற்றி நாளை ஆராய்வர்

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை, கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாக கருதி, அவர்மீது கட்சி என்ன நடவடிக்கை எடுப்பது என்பது

[6-ம் பக்கம் பார்க்க]

## இந்திமொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டை எதிர்நோக்கும் பொதுப் பிரச்சினையான இந்திமொழி திணிப்புப் பற்றியே இவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்தி மொழித்திணிப்புக்கு எதிரான தமிழ்நாடு மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் தீர்மானம் ஒன்றை சட்ட மன்றத்தில் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவது தொடர்பாகவே இந்த ஆலோசனை நடைபெற்றது

தமிழ்நாடு சட்டமன்றத்தில் உள்ள அறையொன்றில் இந்தச்சந்திப்பு நிகழ்ந்தது.

இந்திமொழி திணிப்பு தொடர்பாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக திரு. கருணுநிதியுடன் முதலமைச்சர் பூர்வாங்க ஆலோசனைகள் நடாத்தியதாக அறிவிக்கப்பட்டது.

# மயிலணியில் இருநாள் விளையாட்டுவிழா

[பலாலி]

சுன்னுகம், மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் 3வது ஆண்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் திரு. அ.சிவபாதம் தலைமையில் ஆரம்பமாகி மறு இரவுவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

வளர்பிறை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு சுன்னுகம் பொலிஸ் அதிபர் திரு. பொ. சுகுணேந்திரன், மானிப்பாய் எம் பி. திரு. தர்மலிங்கம், மல்லாகம் இந்துக்கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் திரு ஏ தம்பித்துரை ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

முதல்நாள் நிகழ்ச்சியாக மாட்டுச் சவாரிப்போட்டி இரவு மின்னெளியில் கரபந்தாட்டப்போட்டி என்பன நடைபெறும். இரண்டாம் நாள் சனிக்கிழமை சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், மற்றும் இருசக்கர உழவு இயந்திர அலங்காரப் பவனி விளையாட்டுப்போட்டிகளும், ஆணழகன் போட்டி; புளுகுப் போட்டியும், பரிசளிப்புவிழாவும் மற்றும் இரவு நடனம் நாடகம் போன்றவையும் நடைபெறவிருக்கின்றன. (ஈ)

## முன்னுள்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [கை-அ]


வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30 சிவாஜி - ஜெயலலிதா பாட்டும் பரதமும்

நாகம்ஸ் (சுன்னுகம்) தினசரி 6-45, 10-00 சனி, ஞாயிறு 2-45 சிவாஜி—விஜயா செல்வம்

Rio (Jaffna) Phone: 7607 Daily 4 Shows Custer of the West

6-வது வெற்றி வாரம் ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த பயணம்

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி - உஷாநந்தினி ராஜபார்ட் ரங்கதுரை (ஈஸ்ட்மன் கலர்) [புதிய பிரதி]

கடைசி வாரம் ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் கமலஹாசன் - சுஜாதா நடித்த உயர்ந்தவர்கள்

9-வது வாரம் வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 5 காட்சிகள் 10-00, 1-00, 3-45, 6-45, 9-45 பைலட் பிரேம்நாத் (ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி நடித்த ஜெயகாந்தனின் ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள் டைரக்ஷன்; A. பீம்சிங்

REGAL (Jaffna) 2-rd CROWDED WEEK Daily at, 4-30, 7-00 & 9-30 p. m BRAD HARRIS - JOEWORKER in SO DARLING SO DEADLY Action Spy Film (Color) விஞடிக்கு விஞடி திகிலூட்டும் சண்டைக் காட்சிகள் நிறைந்தபடம்.

Shanthi - (Jaffna)Phone-7642 3rd Crowded Week! 10-30, 2-30, 4-45, 7-00,&9-30 SEVEN NIGHTS IN JAPAN More Suitable for Adults — Eastman Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி; 2-00, 6-00&9-30 சனி, ஞாயிறு: 10-00, 2-00 6-00 & 9-30 எம். ஜி. ஆர். — பத்மினி மதுரைவீரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்; 7606 தினசரி 4 காட்சிகள் விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு ஆசை அறுபதுநாள்

# யாழ். நவீன மார்க்கட் விவகாரம் பிரதமருடன் அமிர் ஆலோசனை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தினார்.

இதைத் தொடர்ந்து யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானத்தை பிரதமர் கொழும்பிற்கு அவசரமாக அழைத்துள்ளதாக தெரியவருகிறது.

வர்த்தகர்கள் சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து யாழ். நவீன மார்க்கட் விவகாரம் பற்றி விரிவாக எடுத்துக் கூறியதாகத் தெரிய வருகிறது.

நவீனமார்க்கட் விவகாரம் தொடர்பான வழக்கு, யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நாளை நடைபெறவிருக்கிறது. (ஏ)



## இந்திய தொழில் அதிபர் பிரதமரைச் சந்தித்தார்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள தொழிலதிபர் திரு வி. ஜி. சந்தோஷம் இலங்கைப்பிரதமர் திரு. பிரேமதாசாவைச் சந்தித்து வீடு கட்டும் திட்டங்கள் பற்றி விவாதித்தார். பிரதமர் இந்தியாவிலிருந்து வீடு கட்டும் திட்டத்துக்கான ஓடுகள், மரச்சாமான்கள், மின்சாரசாதனங்கள் முதலியவைகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் கிடைக்கக்கூடிய பொருட்களை துரிதமாக அனுப்பவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

திரு. வி. ஜி. சந்தோஷம் பிரதமருக்கு நன்றி தெரிவித்து மாலை அணிவித்து வேலைப்பாடமைந்த வெண்கலத் தட்டை பரிசாகக் கொடுத்தார். இலங்கை அரசாங்கம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்திற்கு முதலிடம் கொடுத்து ஆர்வம் காட்டி வருவதற்கு திரு. சந்தோஷம் தனது பாராட்டை தெரிவித்துக்கொண்டார். பிரதமர் திரு. பிரேமதாசா இந்தியா செல்லும்போது வி. ஜி. பி. கோல்டன் பீச்சுக்கு வருகை தரும்படி திரு. சந்தோஷம் கேட்டுக்கொண்டார்.

இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும், ஒன்றுசேர்ந்தும் பணிபுரிய வேண்டுமென்றும், இந்தியாவிலிருந்து வீடு கட்டும் திட்டத்திற்கான பொருட்கள் வாங்குவதற்கு இலங்கை அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாகவும் திரு. சந்தோஷம் நிருபர்களிடம் கூறினர். இலங்கைக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை கண்டறிந்துவிட்டு இம் மாதக் கடைசியில் திரு. சந்தோஷம் நாடு திரும்புவார்.

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய நிர்வாகப் பிரச்னை

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில், நிர்வாகிகளும், வழிபடுவோரும் தனித்தனியாக கோவில் பரிபாலனத் திட்டமொன்றை சமர்ப்பித்து அத்திட்டம் ஆராயப்பட்டு சமரசத் தீர்வு காணாதபட்சத்தில், விசாரணை நடாத்துவதற்கு இரு பகுதியினரும் நேற்று யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்த கூட்டத்தில் சம்மதம் தெரிவித்தனர்.

இக்கோவில் நிர்வாக சீர்கேடுபற்றி, வழிபடுவோர் சமர்ப்பித்த மகஜரைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோவினால் நியமிக்கப்பட்ட குழு இக்கூட்டத்தை கூட்டியிருந்தது.

வழிபடுவோரினால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் தொடர்பாக விசாரணை நடாத்த அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட இக்குழுவில் இளைப்பாறிய நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை [தலைவர்] இளைப்பாறிய அதிபர் திரு. என். சபாரத்தினம், இளைப்பாறிய கணக்காளர் திரு. வி. பசுபதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

குழுத்தலைவர் திரு. எஸ். தம்பித்துரை தலைமையில், யாழ். அரசாங்க செயலகத்தில் நடந்த கூட்டத்தில் வழிபடுவோர் 35 பேரும், ஆலய நிர்வாகிகள் நால்வரும் சமூகமளித்திருந்தனர்.

தலைவர் திரு. தம்பித்துரை, இக்கோயில், ஒரு பிரபலமான கோவிலென்றும், இவ்விடயத்தில் இருபகுதியினரும் சமாதானமாக சமரசத்திற்கு வருவது நல்லது என்றும் கூறினர்.

இதற்கு ஆலய நிர்வாகிகள் சில ஆட்சேபங்களை தெரிவித்தனர். இந்த ஆட்சேபனைகளை தலைவர் நிராகரித்தார்.

இதனைத் தொடர்ந்து தலைவர் திரு. எஸ். தம்பித்துரை வழிபடுவோரினால் அனுப்பப்பட்ட மகஜரை கூட்டத்தில் வாசித்தார்.

கோவில் காணி அரசினால் தர்மசாதனமாக வழிபடுவோருக்கு வழங்கப்பட்டிருக்கிறதென்றும் தற்போதுள்ள கோவில் கட்டடங்கள் எல்லாம் வழிபடுவோரால் கட்டப்பட்டதென்றும் கோவில் நிர்வாகிகள் வரும்படிகளை கோவிலுக்கு பயன்படுத்துவதில்லையென்றும், கூறப்பட்டிருந்தது.

இம்மகஜர் தொடர்பான விசாரணை மானிப்பாய் பட்டண சபை மண்டபத்தில் மார்ச் மாதம் 3ம் தேதிமுதல் 10ம் தேதிவரை நடைபெறும் எனத் தலைவர் தெரிவித்தார்.

இரு பகுதியினரும், தனித்தனியாக கோவில் பரிபாலன திட்டமொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென்றும், இத்திட்டம் ஆராயப்பட்டு சமரசம் காணாதபட்சத்தில் விசாரணை நடைபெறும் என தலைவர் தெரிவித்த ஆலோசனையை இருபகுதியினரும், சம்மதத்துடன் ஏற்றுக்கொண்டனர்.

### கூட்டணி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி ஆராய தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு நாளை மாலை, நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்தின் கொழும்பு இல்லத்தில் கூடுகிறது.

ஒழுங்கு நடவடிக்கைக்குழு எடுக்கும் முடிவு, யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய செயற்குழுவிடம் சமர்ப்பிக்கும். [ம]

### கேரதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கு வந்து தேடுதல் நடத்தினர்கள். அப்பகுதியிலிருந்து செல்லும் சகல வாகனங்களும் சோதனையிடப்பட்டது. சில வீடுகளும், சோதனையிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இளைஞர்கள் நால்வரும், 20 வயதிற்குட்பட்டவர்களாகக் காணப்பட்டனரென்றும், மூவர் குள்ளமானவர்களென்றும் ஒருவர் உயரமானவரென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. நால்வரும் நீண்ட மூடி வளர்த்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இதுவரை சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை.

[கொக்கு நி. க]

## சுழிபுரம் தபால் நிலையத்தில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதற்குமேல், வேட்டி அணிந்திருந்தாராம்.

தபாற்கந்தோரிலுள்ள பாதுகாப்பு அறையில், சுமார் 15,000 ரூபா அச்சமயம் இருந்ததாகவும், பாதுகாப்பு அறைச் சாவியை இளைஞர்கள் கேட்டபோது, சாவி உபதபாலதிபரிடமென தபாலதிபர் கூறியதாகவும் கூறப்படுகிறது.

இளைஞர்கள் பாதுகாப்பு அறைப்பூட்டை கம்பியால் உடைக்க முயற்சித்துதோல்வி காணவே, தபாலதிபரைக் கதிரையில் வைத்துக்கட்டி, வாயில் துணியைத் திணித்த பின் காலை ஐந்தரை மணி வரை மூச்சுவிடக் கூடாதென எச்சரித்துவிட்டுச் சென்றனரென விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேல்மாடியில் காவல்செய்து கொண்டிருந்த இளைஞரி அங்கிருந்த 'சீக்கோ' கைக்கடிகாரத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

தபாற்கந்தோரைச் சுற்றியுள்ள பகுதியில் நான்குஇடங்களில் தந்திக்கம்பி வெட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4மணிக்கு தபாலதிபர் கட்டுகளை ஒருவாறு தளர்த்திக்கொண்டு, அயலவரின் உதவியுடன் சங்கானைப் பொலிசில புகார்செய்தார்.

பெரும்தொகையான ஆசிரியர்களின் சம்பளப்பணம் தபாற்கந்தோரில்இருக்குமென எதிர்பார்த்தே இளைஞர்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாமென பொலிஸ்வட்டாரங்கள் கருதுகின்றன.

தபாற்கந்தோரிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட தபால் பெட்டி, உடைக்கப்பட்ட நிலையில் மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள நெசவு நிலையத் தருகில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

(கொக்கு, சங்கா, சுழிபுரம் நிரு க)

### தவறிவிட்டது

இருபதாம் திகதி மாலை, யாழ்ப்பாணம் - கொடிகாமம் பஸ்ஸிலோ அல்லது, இருபத்தொராம் திகதி காலை, சாவகச்சேரி-மானிப்பாய் பஸ்ஸிலோ, தவறுதலாக நான்கு துறப்புகள் அடங்கிய திறப்புக் கோர்வை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். டாக்டர் எஸ் வி. பரமேஸ்வரன் 21 கச்சாய் வீதி, சாவகச்சேரி. 1713

### சென். அன்ரனிஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் "நொக்கவுட்" உதைபந்தாட்டப் போட்டியின் அரைஇறுதியாட்டத்தில் சென். அன்ரனிஸ் கழகம், யாழ் முஸ்லிம்ஸ் கழகத்தை 6—2 கோல்களால் வெற்றி பெற்றது

சாம்பியன் மோதல்

இப்போட்டியின் சாம்பியன் மோதல் எதிர்வரும் சனிக்கிழமை சென் அன்ரனிஸ் கழகத்துக்கும், சென். மேரிஸ் கழகத்துக்குமிடையில், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

## துப்பாக்கி முனையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியபடி, பணத்தை கொள்ளையடித்ததாக கூறப்படுகிறது. நீர்வேலியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தசாமி என்ற பிரயாணியிடமிருந்து 125 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாம்.

கைத்துப்பாக்கிகள், கிறிஸ் கத்தி சகிதம், நான்கு இளைஞர்கள் பஸ்ஸை மறித்து ஏறிக்கொண்டதாக கூறப்படுகிறது.

20 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞர்கள் நால்வரும் நீண்ட முடி வளர்த்திருந்தார்களென்றும், ஒருவர் சாரம் அணிந்திருந்தாரென்றும் கூறப்படுகிறது

முதலில் பஸ்ஸில் ஏறிய இளைஞர் கைத்துப்பாக்கியை சாரதி இருந்த பக்கம்காட்டி, பஸ்ஸை நிறுத்துமாறு எச்சரித்ததாகவும், அதேசமயம் மற்றும் இரு இளைஞர்களும், துப்பாக்கியை பிரயாணிகளின் பக்கம் நீட்டி, 'எல்லோரும் குனிந்து படுங்கள்' என எச்சரித்தனராம்

பிரயாணிகள் எல்லோரும், குனிந்தபடி முன்சீட்டில் தலையை வைத்தபடி படுத்துவிட்டனராம். இச்சந்தர்ப்பத்தில் நகைகள் அணிந்திருந்த பெண், தாலிக்கொடியையும், காப்புகளையும் எவருக்கும் தெரியாமல் கழட்டி சீட்டுக்கு கீழே போட்டுவிட்டாரென்று கூறப்படுகிறது.

துப்பாக்கிமுனையில் இளைஞர்கள், பிரயாணிகளிடம் சென்று பணத்தை தருமாறு எச்சரித்தனராம் ஒரு பிரயாணியின் பாக்கெட்டிலிருந்து 135 ரூபாவை பறித்து எடுத்தனரென்றும் கூறப்படுகிறது.

கொள்ளையடித்த பின்னர் பஸ்ஸில் இருந்து இறங்கிய சமயம், இளைஞர்களில் ஒருவர் சாரதியை நோக்கி சுட்டதாகவும், அச்சூடு முன்கண்ணாடியில்பட்டு, பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும், இதனால் பஸ் சாரதியின் கையில் காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இளைஞர்கள் இறங்கிச்சென்ற பின், பஸ்கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு செலுத்திச்செல்லப்பட்டு அங்கு புகார் செய்யப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ். பொலிஸ் அதிபருடனும், யாழ் இ. போ. ச. அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு நிலைமையை தெரிவித்தாராம்.

இரவு 11-30 மணிக்கு கோண்டாவில் டிப்போவிலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு பஸ் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. போதிய பாதுகாப்பின்றி பொலிஸ் நிலையத்திலிருந்து பிரயாணத்தைத் தொடருவதற்கு பிரயாணிகள் மறுத்துவிட்டனர்.

பொலிஸ் நிலையத்தில் தங்கிவிட்டு காலையில் வீடு செல்வதாக சில பிரயாணிகள் தெரிவித்தனர். இத்நிலையில் இ. போ. ச. சாரதி வி. குழந்தைவேலு, பஸ்டிப்போ உயர் அதிகாரிகளின் உதவியுடன், பஸ்ஸை கொண்டுசெல்ல முன் வந்ததால் பிரயாணிகள் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர்.

பஸ் டிப்போ சிரேஷ்ட பரிசோதகர் திரு எம். விஜயரத்தினம், பரிசோதகர் திரு எஸ். பி அத்தனன், திரு சி. எஸ் விமலேந்திரன் ஆகியோர் பிரயாணிகளுக்கு பாதுகாப்பாகச் சென்றனர்.

கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் லாபீர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். இது வரை சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை.

[கொக் நி - க]


## மரண அறிவித்தல்

**Dr. R. சிவராசா**

I. M. P. [Ceylon], M H P. A. [London], M. D. M. S. & P. H. D. [Culcutta] M. H. H. [Madras]

சித்தாயுர்வேத கல்லூரி முன்னாள் உறுப்பினரும் அன்னரத்தினத்தின் அன்புக் கணவருமான டாக்டர் ஆர். சிவராசா காலமானார். அன்னாரின் தகனக்கிரியைகள் 22-2-79 வியாழக்கிழமை 10 மணிக்கு யாழ் வில்லூன்றி மயானத்தில் இடம் பெறும். 7, சிமம்பியடி ஒழுங்கை,(ஆரியகுளத்தடி)யாழ்ப்பாணம். 1712


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News Paper in Sri Lanka.-